**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.513/2021**
**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விநாயகம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியன் | தொழில் | : | மில் சூப்பர்வைசர் |
| கிராமம் | : | இராமச்சந்திரபட்டனம் | வயது | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 09th, 2025.

(எதிரிகள் ஆஜர். **எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் பாவூர்சத்திரம் இராமச்சந்திரபட்டணத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் 2 ஒப்புதல் வாக்குமூலத்திலும் 3 அத்தாட்சிகளிலும் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். நான் ஜெயகுருசாமில்லில் வேலை பார்த்தபோது அங்கு மணிகண்டன் என்பவர் வேலை பார்த்தார். அவரை எனக்கு நன்கு தெரியும்,. நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியுள்ளார். கடந்த 9.10.2020 ம் தேதி மதியம் சுமார் 2.00 மணிக்கு சாந்தி மருத்துவமனை பக்கம் நின்று கொண்டிருந்த போது அப்போது ஆஜர் எதிரியான மணிகண்டன் மற்றொரு நபரையும் போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். எனது சாமில் முதலாளியான ஜெயபால் வீட்டில் கொள்ளையடித்தது மணிகண்டன் தான் என்று அவர் ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் அல்போன்ஸ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். இன்னொரு எதிரியும் ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த

ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் அல்போன்ஸ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அதன் பின்பு நான் சாமில் வேலைக்கு சென்று விட்டேன். வய்க்கால்பாலத்தில் வைத்து எதிரி மணிகண்டன் எடுத்து ஆஜர் செய்த ஒரு பல்சர் பைக் மற்றும் காரை போலீசார் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றிய போது உடனிருந்து கையொப்பம் செய்தேன். அந்தஅத்தாட்சி அ.சா.ஆ.3 ஆகும். ஒப்புதல்வாக்குமூலத்தில்உள்ள என்னுடைய கையெழுத்துக்கள் அ.சா.ஆ.4 ,5 ஆகும். மீதமிருக்கும் அத்தாட்சியில் உள்ள என்னுடைய கையெழுத்துக்கள் அ.சா.ஆ.6,7 இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தவாறு தான் போலிஸ் விசாரணையிலும் கூறியுள்ளேன். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட காரின் பதிவு எண் எனக்கு ஞாபகம் இல்லை. பைக் பதிவு எண்.,கம்பெனி விபரம் எனக்கு ஞாபகம் இல்லை. வாய்க்கால்பாலத்தில் தென்பகுதியிலா வடபகுதியிலா நடுப்பகுதியிலா போலிசார் எதிரியிடமிருந்து வாகனத்தை கைப்பற்றினார் என்று எனக்கு ஞாபகம் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரியிடமிருந்து எந்த ஒரு பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் , ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவிலலை என்றாலும் எழுதாத வெற்று பேப்பரில் நான் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றல் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் வெற்றுப் பேப்பரில் நான் கையெழுத்து செய்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், அசா1 யிடம் நான் வேலை பார்த்ததினால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி அல்போன்ஸ் என்பவர் என்னுடன் வரவில்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.12 17:36:35 +0530